பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 5

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 12

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 19

தொடக்கம் 23

1 அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமான நான்கு வார்த்தைகள் 25

2 முழு உலகையும்விட நபியவர்களுக்கு விருப்பமான வார்த்தைகள் 26

3 முதுமையிலும் மகத்தான நன்மைகள் வழங்கும் நற்செயல் 27

4 பாவங்களை மன்னிக்கும் வார்த்தைகள் 30

5 சொர்க்கத்தின் செடிகளாகும் வார்த்தைகள் 32

6 நீண்டநாள் வாழ்ந்தவரைச் சிறந்தவராக்கும் வார்த்தைகள் 33

7 நன்மைகள் வழங்கி பாவங்களை அழிக்கும் வார்த்தைகள் 35

8 நரகத்தை விட்டுக் காக்கும் வார்த்தைகள் 37

9 அர்ஷைச் சுற்றிவரும் வார்த்தைகள் 39

10 மீஸானில் கனமான வார்த்தைகள் 41

11 தர்மத்தின் கூலி தரும் வார்த்தைகள் 42

12 குர்ஆன் ஓதத்தெரியாதவருக்கு எளிய வார்த்தைகள் 44

அல்ஹவ்கலா 45

முன்னுரை 47

ஆய்வு ஒன்று: ஹவ்கலா பற்றிய விரிவான விளக்கங்கள் 53

ஆய்வு இரண்டு: ஹவ்கலாவின் சிறப்புகள் 57

ஆய்வு மூன்று: ஹவ்கலாவில் உள்ள கொள்கை சார்ந்த ஆதாரங்கள் 67

3

முதுமையிலும் மகத்தான நன்மைகள் வழங்கும் நற்செயல்

✿

உம்மு ஹானீ பின்த் அபீ தாலிப் ﵂ அறிவிக்கிறார்கள்:

مَرَّ بِي ذَاتَ يَوْمٍ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقُلْتُ يَا رَسُولَ اللهِ إِنِّي قَدْ كَبِرْتُ وَضَعُفْتُ وَبَدُنْتُ فَمُرْنِي بِعَمَلٍ أَعْمَلُهُ وَأَنَا جَالِسَةٌ قَالَ سَبِّحِي اللهَ مِائَةَ تَسْبِيحَةٍ فَإِنَّهَا تَعْدِلُ لَكِ مِائَةَ رَقَبَةٍ تُعْتِقِينَهَا مِنْ وَلَدِ إِسْمَاعِيلَ وَاحْمَدِي اللهَ مِائَةَ تَحْمِيدَةٍ تَعْدِلُ لَكِ مِائَةَ فَرَسٍ مُسْرَجَةٍ مُلْجَمَةٍ تَحْمِلِينَ عَلَيْهَا فِي سَبِيلِ اللهِ وَكَبِّرِي اللهَ مِائَةَ تَكْبِيرَةٍ فَإِنَّهَا تَعْدِلُ لَكِ مِائَةَ بَدَنَةٍ مُقَلَّدَةٍ مُتَقَبَّلَةٍ وَهَلِّلِي اللهَ مِائَةَ تَهْلِيلَةٍ قَالَ ابْنُ خَلَفٍ أَحْسِبُهُ قَالَ تَمْلَأُ مَا بَيْنَ السَّمَاءِ وَالْأَرْضِ وَلَا يُرْفَعُ يَوْمَئِذٍ لِأَحَدٍ مِثْلُ عَمَلِكِ إِلَّا أَنْ يَأْتِيَ بِمِثْلِ مَا أَتَيْتِ بِهِ

ஒரு முறை அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் என்னைக் கடந்து சென்றார்கள். அப்போது நான் அவர்களிடம், 'நான் வயதான பெண்மணியாகவும் பலவீனமாகவும் ஆகிவிட்டேன்' என்று கூறினேன்.

இன்னோர் அறிவிப்பின்படி, 'நான் உட்கார்ந்தபடியே செய்கின்ற ஓர் அமலை எனக்குக் கட்டளையிடுங்கள் என்று கேட்டேன்' என்பதாக வந்துள்ளது. அப்போது நபியவர்கள்,

'நூறு முறை ஸுப்ஹானல்லாஹ் என்று சொல்லுங்கள். அது இஸ்மாயீல் ﵇ அவர்களின் வழித்தோன்றல்களில் நீங்கள் நூறு அடிமைகளை விடுதலை செய்ததைப் போன்ற கூலியைக் கொடுக்கும்.

அல்ஹம்துலில்லாஹ் என்று நூறு முறை சொல்லுங்கள். அது நீங்கள் கடிவாளமிடப்பட்டு, சேணம் பூட்டி வளர்த்துவிடுகிற நூறு குதிரைகளை அல்லாஹ்வின் பாதையில் அனுப்புவதைப் போன்ற கூலியைக் கொடுக்கும்.

பெற்றுவிடுவார். அந்நாளில் அவரைப் போன்றே நூறு முறை லா இலாஹ இல்லல்லாஹ் சொன்னவரைத் தவிர வேறு யாரும் அவருடைய அமல் அளவுக்கு தகுதியானவராக ஆகமாட்டார்.

சென்று, அவரும் வீரமரணம் அடைந்தார். பின்பு மூன்றாம் நபர் படுக்கையிலேயே காலமாகிவிட்டார்.

தல்ஹா ﷺ கூறுகிறார்கள்: 'என்னிடம் இருந்த அந்த மூவரையும் கனவில் சொர்க்கத்தில் இருக்கக் கண்டேன்.

அப்போது படுக்கையிலேயே மரணமானவரை அவர்களில் முதன்மையானவராக கண்டேன்.

இரண்டாவதாக, வீரமரணம் அடைந்தவரை அவருக்கு அடுத்து இருக்க கண்டேன்.

ஆரம்பமாக வீரமரணம் அடைந்தவரை அவர்களில் இறுதியாக இருக்கக் கண்டேன்.

நான் நபி ﷺ அவர்களிடம் வந்து இதைப் பற்றித் தெரிவித்தேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் 'இதில் எதை நீங்கள் மறுக்கிறீர்கள்? தக்பீர், தஸ்பீஹ், தஹ்லீல், தஹ்மீது ஆகியவற்றை அதிகமாகச் சொல்லி, இஸ்லாமியனாகவே நீண்ட காலம் உயிர் வாழ்ந்த ஓர் இறைநம்பிக்கையாளரைவிட அல்லாஹ்விடம் மிகச் சிறப்பிற்குரியவர் எவரும் இல்லை' என்று கூறினார்கள். (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு ஷத்தாத் ﷺ, அஹ்மது 1401, ஸஹீஹா 654)

ஒருவர் நீண்ட நாள் உயிர் வாழ்ந்து, அவருடைய செயல்பாடும் அழகியதாக இருந்து, அவருடைய நாவும் திக்ரினால் நனைந்து கொண்டே இருந்தால் அவர் பெரும் சிறப்பிற்குரியவர் என்று இந்த மேன்மைமிக்க நபிமொழியின் மூலம் தெரிய வருகிறது.

ஒவ்வொரு தக்பீராவுக்கு (அல்லாஹு அக்பர் சொல்வதற்குப்) பகரமாகவும் ஒரு தர்மம் புரிந்த நன்மை கிடைக்கிறது.

ஒவ்வொரு தஹ்மீதாவுக்கு (அல்ஹம்துலில்லாஹ் சொன்னதற்குப்) பகரமாகவும் ஒரு தர்மம் புரிந்த நன்மை கிடைக்கிறது.

ஒவ்வொரு தஹ்லீலாவுக்கு (லா இலாஹ இல்லல்லாஹ்வுக்கு) பகரமாகவும் ஒரு தர்மம் புரிந்த நன்மை கிடைக்கிறது.

நன்மையை ஏவுவதற்கு பகரமாக ஒரு தர்மம் புரிந்த நன்மை கிடைக்கிறது.

தீமையைத் தடுப்பதற்கு பகரமாக ஒரு தர்மம் புரிந்த நன்மை கிடைக்கிறது.

உங்களில் ஒருவர் தமது மனைவியுடன் புணர்ச்சியில் ஈடுபடுவதிலும் தர்மம் புரிந்த நன்மை கிடைக்கிறது' என்று கூறினார்கள்.

அப்போது நபித்தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருவர் ஆசையோடுதானே தன் மனைவியிடம் நெருங்கிச் செல்கிறார். அதிலும் அவருக்கு பிரதிபலன் கிடைக்குமா?' என்று கேட்டார்கள். அப்போது நபியவர்கள், 'மார்க்கம் தடை விதித்தவற்றில் (விபச்சாரத்திற்கு) சென்றால் அவருக்கு பாவம் தானே? அவ்வாறே மார்க்கம் ஆகுமாக்கிய வழியில் மனைவியிடம் சென்றால் அவருக்குப் பிரதிபலன் கிடைக்கும்' என்று கூறினார்கள். (முஸ்லிம் 1006)

ஏழைகள் பொருளைக் கொண்டுதான் தர்மம் செய்ய முடியும் என எண்ணியிருந்தார்கள். அவர்கள் அதற்கு இயலாதவர்களாக இருந்தார்கள். அப்போதுதான் நபி ﷺ அவர்கள் நற்செயல்கள் அனைத்துக்கும் தர்மம் செய்த நன்மை கிடைக்கும் என்று அறிவித்தார்கள்.

இந்த நபிமொழியின் ஆரம்பமாக நபியவர்கள் ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகிய கலிமாக்களை கூறியிருப்பதைக் கவனியுங்கள்.

ஆய்வு ஒன்று:
ஹவ்கலா பற்றிய விரிவான விளக்கங்கள்

✿

'லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்' لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ என்ற வாசகத்தைக் குறிக்கும் சுருக்க வடிவம்தான் ஹவ்கலா என்பது.

இரண்டு அல்லது அதிகமான வார்த்தைகளை ஒரே வார்த்தை யில் சொல்லிப் புரிவதற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் இந்த சுருக்கெழுத்து முறை. இதற்கு (مَنْحُوْتَةٌ) 'மன்ஹூத்' - செதுக்கப்பட்டது என்று பொருள். எ.கா: (عَبْدُ قَيْس) அப்து கய்ஸ் என்பதை (عَبْقَسِي) அப்கஸி என்றும், (بِسْمِ اللهِ) பிஸ்மில்லாஹ் என்பதை (بِسْمِلْ) பிஸ்மில் என்றும் சொல்வதைப் போல. (அப்துஹ் ராஜிஹீயின் தத்பீகுஸ் ஸர்ஃபீ 29, அபூ ஹய்யானின் அல்முப்ததிஃ ஃபீ தஸ்ரீஃப் 101, முஹம்மது அப்துல் காலிக் அழீமாவின் அல்முஃக்னீ ஃபீ தஸ்ரீஃபில் அஃப்ஆல் 107, அப்துல் ஹமீத் அன்தரின் தஸ்ரீஃபுல் அஃப்ஆல் 127)

இவ்வாறுதான் 'லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்' என்பது (حَوْقَلَ) ஹவ்கல் என்றும், (حَوْقَلَ) ஹவ்கலா, (حَوْلَقَ) ஹவ்லகா என்றும் கூறப்படுவதுண்டு என இமாம் நவவீ கூறுகிறார்கள். (ஷரஹ் நவவீ அலா ஸஹீஹ் முஸ்லிம் 17/27)

லா ஹவ்ல என்பது ஹவ்கலா என்ற வார்த்தையால் சுருக்கிக் கூறப்படும் என இமாம் அஜ்ஹரீ ﷺ உட்பட பலரும் கூறியுள்ளார் கள். இது ஹவ்லகா என்றும் கூறப்படும். எனினும், ஹவ்கலா என்பதுதான் பிரபலமான சொல்லாகும். இந்த வார்த்தை உருவானது இப்படித்தான்:

லா (ஹவ்)ல வலா (கு)வ்வத இல்லா பி(ல்)லாஹ் - ஹவ்கலா.

லா (ஹவ்ல) வலா (கு)வ்வத இல்லா பில்லாஹ் - ஹவ்லகா.

இதில் முதலாவது முறைதான் முதன்மையானது. ஏனெனில், இதில்தான் எழுத்துப் பிரிவினை இல்லை. (அல்மஸ்தருஸ்ஸாபிக் 4/87, ஷவ்கானீயின் நய்லுல் அவ்தார் 2/38)

ஆய்வு மூன்று:
ஹவ்கலாவில் உள்ள கொள்கை சார்ந்த ஆதாரங்கள்

✿

கண்ணியமிக்க இந்தக் கலிமாவைப் பற்றிய சிறப்புகளும், விளக்கங்களும் அதன் ஆழமான அர்த்தங்களும், அதற்கான ஆதாரங்களும், அதற்குரிய பலன்களும் அழகிய முறையில், நேரிய வழியில் முன்பே கூறப்பட்டுவிட்டன.

ஹவ்கலாவின் அழகையும் அர்த்தத்தையும் ஆதாரத்தையும் அதன் நோக்கத்தையும் விளங்குவதற்கு அபூ ஹுரைரா ﷺ அவர்களின் பின்வரும் இந்த அறிவிப்பு ஒன்றே போதுமானது.

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறியதாக அபூ ஹுரைரா ﷺ அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது:

أَلَا أَدُلُّكَ – عَلَى كَلِمَةٍ مِنْ تَحْتِ الْعَرْشِ مِنْ كَنْزِ الْجَنَّةِ؟ تَقُولُ: لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ، فَيَقُولُ اللَّهُ عَزَّ وَجَلَّ: أَسْلَمَ عَبْدِي وَاسْتَسْلَمَ

‘சுவனப் புதையல்களில் உள்ள ஒரு வாசகம் அர்ஷின் கீழ் உள்ளது. அதை நான் உங்களுக்குச் சொல்லட்டுமா?’ என்று கேட்டுவிட்டு நபி ﷺ அவர்கள் இப்படிக் கூறினார்கள்: லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ் என்று நீ கூறினால், ‘என் அடியான் கீழ்ப்படியத் தேடினான்; அவ்வாறே அவன் கீழ்ப்படிந்துவிட்டான்’ என்று அதற்குப் பதிலாக இதை அல்லாஹ் கூறுவான். *(முஸ்தத்ரக் அல்ஹாகிம் 54, ஸஹீஹுல் ஜாமிஉ 2614)*

இப்னு அப்பாஸ் ﷺ அறிவிக்கிறார்: எவர் பிஸ்மில்லாஹ் என்று கூறுகிறாரோ அவர் அல்லாஹ்வை நினைவுகூறியவர் ஆவார். எவர் அல்ஹம்து லில்லாஹ் என்று கூறுகிறாரோ அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவர் ஆவார். எவர் அல்லாஹு அக்பர் என்று கூறுகிறாரோ அவர் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தியவர் ஆவார். எவர் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவாரோ அவர் அல்லாஹ்வை